என்றெல்லாம் தெரிவித்தார். அதுதான் உண்மை. விவசாயிகளாக முன்வந்து, கூட்டுறவுக் கடனிலே ரூ. 35-ஐக் கழித்துக் கொள்ளலாம் என்று சொன்னால், அது மிகவும் வரவேற்கத் தக்கது. இரண்டையும் அரசு பரிசீலித்து வருகிறது.

1985-ல் தமிழகத்தில் மாம்பழ உற்பத்தி

515—(*வினா எண் 5922) **திரு. இரா. தாமரைக்கனி:** மாண்புமிகு தொழில் மற்றும் வேளாண்மைத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தமிழ்நாட்டில் 1985 ஆம் ஆண்டு மாம்பழ உற்பத்தி எவ்வளவு?

(ஆ) வெளிநாடுகளுக்கு ஏற்றுமதி செய்யப்படுகிறதா?

(இ) அதன் மதிப்பு எவ்வளவு?

மாண்புமிகு திரு. க. இராசாராம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) தமிழ் நாட்டில் 1984-85 ஆம் ஆண்டு மாம்பழ உற்பத்தி மதிப்பீடு 3.31 இலட்சம் மெட்ரிக் டன்கள் ஆகும்.

(ஆ) ஆம்.

(இ) அதன் மதிப்பு ரூ. 0.98 இலட்சம்.

திரு. இரா. தாமரைக்கனி: பேரவைத் தலைவர் அவர்களே, மாம்பழத்தைத் தனியார் ஏற்றுமதி செய்வது தடைபடுத்தப் பட்டிருக்கிறது. தமிழ் நாட்டில் மாம்பழம் 20 சதவிகிதம்தான் உற்பத்தியாகிறது. மீதி 80 சதவிகிதம் ஆந்திராவிலிருந்துதான் வருகிறது. ஆகவே, மாம்பழ உற்பத்தியைப் பெருக்குகிற வகையில், மாம்பழ வாரியம் என்று அரசு ஏற்பாடு செய்யுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. க. இராசாராம்: தலைவர் அவர்களே, மாம்பழ வாரியம் இல்லாமலேயே மாமரம் ரொம்பக் கருணை காட்டி இருக்கிறது. 1983-84 ஆம் ஆண்டு 71,000 டன்கள்தான் உற்பத்தி; 1984-85 ஆம் ஆண்டு 3.31 இலட்சம் டன்கள் உற்பத்தி யாகியிருக்கிறது என்பதை நான் தெரிவித்துக் கொள்கிறேன்.

1987 ஏப்ரல் 28]

(முற்பகல் 10-10)

திரு. இரா. தாமரைக்கனி: பேரவைத் தலைவர் அவர்களே, கர்நாடகத்தில் மாம்பழங்களெல்லாம் புளிப்பதே கிடையாது. அப்படிப் புளித்தாலும் இன்ஜெக்ஷன் போட்டு அதை இனிப்பாக்கி விடுகிறார்கள். நம் தமிழ்நாட்டில் சில வகை மாம்பழங்கள் புளிப்பாக இருக்கின்றன. அதே மாதிரி இன்ஜெக்ஷன் போட்டு மாம்பழங்கள் கர்நாடகத்தில் இருப்பதைப்போல இனிப்பதற்கு வேண்டிய ஏற்பாட்டை அரசு செய்யுமா என்று அறிய விரும்பு கிறேன்.

மாண்புமிகு திரு. க. இராசாராம்: தலைவரவர்களே, இந்த ஆராய்ச்சியெல்லாம் தமிழ்நாட்டிலே ஏற்கனவே கோயம்புத்தூரில் ஜி. டி. நாயுடு அவர்களாலே செய்யப்பட்டிருக்கிறது. இது ஒன்றும் புதுமை அல்ல.

டாக்டர் த. முகம்மது சலீம்: மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, பெரியகுளம் வட்டத்தில் ஏறக்குறைய மூன்று கோடி ரூபாய் அளவில் ஒவ்வொரு ஆண்டும் மாம்பழம் உற்பத்தி செய்யப்பட்டு, பெங்களூர், பம்பாய், நாக்பூர் போன்ற இடங்களுக்கு அனுப்பப்படுகிறது. பெரியகுளம் தொகுதி ஒரு வறட்சி தொகுதியாக இருக்கின்ற காரணத்தினாலும், அங்கே எந்தவிதமான தொழிற்சாலையும் இல்லாத காரணத்தினாலும் மாம்பழம் பதனிடும் தொழிற்சாலை ஒன்றை அமைக்கும் குறிப்பு அரசிடம் உள்ளதா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. க. இராசாராம்: தலைவரவர்களே, மதுரையைவிட தர்மபுரி மாவட்டத்திலேதான் அதிகமான மாம்பழங்கள் உற்பத்தி ஆகின்றன. ஆகவே, தற்பொழுது அப்படிப்பட்ட எண்ணம் அரசுக்கு இல்லை.

டாக்டர் கே. சமரசம்: பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சரவர்கள் குறிப்பிட்டதைப்போல, தர்மபுரி மாவட்டத்தில் மாம்பழம் மிக அதிக அளவிலே உற்பத்தி ஆகிறது. சேலத்து மாங்கனி என்றுகூடப் பெயர்பெற்றது தர்மபுரி மாவட்டத்திலே உற்பத்தியாகி, சேலம் ஒன்றாக இருந்தபொழுது அங்கு மார்க்கெட்டுக்கு வந்த காரணத்தினால்தான். அந்த மாம்பழத்தை இப்பொழுது தனியார் பல்வேறு மாநிலங்களுக்கும்,

வெளிநாடுகளுக்கும் அனுப்பி வைத்துக்கொண்டிருக்கிறார்கள். ஆகவே, அந்த மாம்பழத்தை நல்லமுறையில் பக்குவப்படுத்தி வெளிநாடுகளுக்கு ஏற்றுமதி செய்யக்கூடிய வகையில் அரசுத் துறையிலேயோ அல்லது கூட்டுறவுத் துறையிலேயோ அதற்கேற்ற தொழிற்சாலையை அமைக்க அரசு ஏதேனும் செயற்குறிப்பு வைத்துள்ளதா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. க. இராசாராம் : பேரவைத் தலைவரவர்களே, மாம்பழம் ஏற்றுமதி ஆகிறது. விமானங்கள் மூலம் வெளிநாடு களுக்கெல்லாம் ஏற்றுமதி ஆகிறது, கப்பல்கள் மூலமாகவும் சென்ற ஆண்டு 24,384 கிலோ மாம்பழம் ஏற்றுமதியாகியிருக்கிறது. ஆனால் அது தமிழ்நாட்டில் மட்டும் விளைந்த மாம்பழமா என்று தெரியவில்லை. ஏனென்றால் ஆந்திராவிலிருந்தும் இந்தத் துறைமுகத்தின் மூலமாகத்தான் மாம்பழங்கள் ஏற்றுமதி யாகின்றன. தற்பொழுது மாம்பழம் சாறு பிழிகின்ற அளவிற்கு மீதம் இருப்பதும் இல்லை; தங்குவதும் இல்லை. ஒரேயொரு தொழிற்சாலை பெங்களூரிலே இருக்கிறது. அதற்கே மாம்பழம் கொஞ்சம்தான் கிடைக்கிறது.

திரு. ஈ. வே. கி. ச. இளங்கோவன் : பேரவைத் தலைவரவர் களே, இமாசலப் பிரதேசத்தில் அந்த மாநில அரசே ஆப்பிள் பழங்களையெல்லாம் சாறாகப் பிழிந்து பாட்டில்களிலேயும், பாலிதீன் பேக்குகளிலேயும், டின்களிலேயும் அடைத்து நாடு முழுவதும் விற்பனைக்கு அனுப்பி அதிக அளவிலே அந்த அரசு இலாபம் சம்பாதித்துக்கொண்டு இருக்கிறது. அதைப்போல நமது அரசும் இந்த மாம்பழங்களையெல்லாம் சாறாக எடுத்துப் பாட்டில்களிலேயும் மற்ற டின்களிலேயும் அடைத்து நாடு முழுவதும் விற்பனை செய்து இலாபம் பெற கருத்து உண்டா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. க. இராசாராம் : தலைவர் அவர்களே, சில தனியார்கள் மாம்பழ ஜூஸ் எல்லாம் செய்து விற்பனை செய்கிறார்கள். மற்றபடி மாம்பழங்கள் அதிகமாக இல்லை. நான் ஏற்கனவே சொன்னதைப்போல சென்ற ஆண்டே 71,000 டன்தான் நமக்குக் கிடைத்தது. இந்த ஆண்டு மூன்று இலட்சத்து

1987 ஏப்ரல் 28]

முப்பத்தோறாயிரம் டன் விளைந்திருக்கிறது. ஆகவே, அதிகமாக இல்லை. அதுவும் நம்முடைய தமிழ் நாட்டில் மக்களுடைய சுபாவம், பழத்தை அப்படியே மார்க்கெட்டிலேயிருந்து வாங்கிச் சாப்பிடுவதுதான். பழ ரசமாகப் பிழிந்து சில கம்பெனிகள் விற்கிறார்கள். அவர்களுடைய முயற்சி, கர்நாடக மாநிலத்திலே இருக்கிறது. இங்கேயிருந்தும் மாம்பழங்களை அங்கே வாங்கிக் கொண்டு போய் பழ ஜூஸாகச் செய்து மற்ற மாநிலங்களுக்கு விற்கிறார்கள்.

திரு. தி. அன்பழகன்: மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, இந்த மாம்பழ ஏற்றுமதி தர்மபுரி மாவட்டத்தைவிட வடார்க்காடு மாவட்டம் திருப்பத்தூரிலேயிருந்து அதிகமாக ஏற்றுமதி செய்யப்படுகிறது. ஆகவே, அதைப் பயன்படுத்தி அங்கே பதப்படுத்துகின்ற தொழிற்சாலை ஏற்படுத்தப்படுமா? வடார்க்காடு மாவட்டத்தில் வேலூரிலே ஏற்கனவே ஏற்படுத்தப் பட்டு மூடியுள்ள அந்தப் பழத் தொழிற்சாலையை மீண்டும் திறப்பதற்கு ஆவன செய்யுமா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. க. இராசாராம்: தலைவரவர்களே, நான் ஏற்கனவே சொன்ன பதிலைத்தான் சொல்ல வேண்டியிருக்கிறது. இங்கே பழம் அதிகமாக இல்லை. இமாசலப் பிரதேசத்தில் ஆப்பிள் ஜூஸ் எடுக்கிறார்கள் என்று சொன்னால், ஒரு நாளைக்கு இமாசலப் பிரதேசத்திலேயிருந்து சென்னைக்கு மட்டும் 15 லாரிகள் லோடு வெறும் ஆப்பிள் பழம் மட்டும் வருகிறது. அந்த அளவிற்கு அங்கே விளைச்சல் அதிகமாக இருக்கிறது. இங்கே இரண்டு மூன்று மாவட்டங்களிலேதான் இருக்கிறது. ஒவ்வொரு மாவட்டத்துக்காரரும் தங்களுடைய மாவட்டத்தில்தான் அதிகமாக விளைவதாகச் சொல்லிக் கொள்கிறார்கள். ஆனால் அது அல்ல உண்மை. தர்மபுரி மாவட்டத்திலேதான் அதிகமாக விளைகிறது.